## முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.69/2018

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி சோமையா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. பா்வீன் பானு, இளநிலை உதவியாளா் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சோமையா | வயது | : | 59/23 |
| தகப்பனார் பெயர் | : | சுந்தரம் | தாலுகா | : | திருமயம் |
| கிராமம் | : | கோட்டூர் | தொழில் | : | விவசாயம் |

நாள்-11.10.2023

பி.வா.சா.1

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) **நான்** எங்கள் ஊரில் கோழிப்பண்ணை வைத்துள்ளேன் என்றால் சரிதான்.

2) நான் பதில் அறிவிப்பு மற்றும் எதிா்வழக்குரை தாக்கல் செய்யும்போது என்வசம் உள்ள ஆவணங்களை கொடுத்துதான் அதற்கு தகவல் சொன்னேன் என்றால் சரிதான்.

3) வழக்கு தாக்கல் செய்த பின்புதான் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் இல்லை. 10.09.2018 லேயே பதில் அறிவிப்பு அனுப்பிவிட்டேன்.

4) 24.09.2018ல் வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், நான் 05.10.2018ல் தான் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான்.

5) பதில் அறிவிப்பு மற்றும் எதிா் வழக்குரை தாக்கல் செய்யும் போது பி.வா.சா.1 மற்றும் பி.வா.சா.ஆ.5 ஆவணங்களை குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான்.

6) கூடுதல் எதிா்வழக்குரை தாக்கல் செய்யும்போது தான் பி.வா.சா.ஆ.1 மற்றும 5 ஆவணங்களை பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

7) வாதி தரப்பில் அதற்கு பதில் வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட விபரம் தெரியும்.

8) வாதி தரப்பு பதில் வழக்குரையில் பி.வா.சா.ஆ.1 மற்றும் 5 ஆவணங்கள் மோசடியாக வாதியின் கையெழுத்தை போட்ட தயாரிக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறு.

9) பி.வா.சா.ஆ.1 மற்றும் 5 ஆவணங்களில் உள்ள கையெழுத்து வாதியின் கையெழுத்து இல்லை என்றும் அதை சட்டப்படி நாங்கள்தான் நிரூபிக்க வேண்டும் என்று அந்த பதில் எதிா்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது வாதியின் கையெழுத்து தான்.

10) அது வாதியின் கையெழுத்து என்பதை நிரூபிக்க சட்டப்படி நிரூபிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

11) அதை நிரூபிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

12) பி.வா.சா.ஆ.1 மற்றும் 5 ஆவணங்களில் உள்ள கையெழுத்து மோசடி கையெழுத்து என்றாலும் அதை நிரூபிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

13) 30.07.2018 மற்றும் 03.09.2018 ஆகிய தேதிகளில் நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன்.

14) 30.07.2018 தேதியில் நான் கொடுத்த புகாரில் 18 காசோலைகள், 19 புரோநோட்டுக்கள் வாதியிடம் கொடுத்ததாக குறிப்பிட்டு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

15) 30.07.2018 தேியிட்டு நான் கொடுத்த புகாருக்கு பின்னிட்டு வாதிக்கும், எனக்குமான நேரடி பேச்சு வார்த்தை தொடர்பு எதுவும் இல்லை.

16) 03.09.2018ம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நேரடியாக புகார் கொடுத்தேன்.

17) நான் அந்த புகாரை பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தேன். அந்த புகாரிலும் பி.வா.சா.ஆ.1 மற்றும் 5 ஆவணங்களை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான்.

18) பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை 03.09.2018ம் தேதி காலை வாதியின் கடையில் வைத்து எழுதினோம். அந்த நேரத்தில் எங்களுக்குள் சுமூகமாக பேச்சு வார்த்தை இருந்தது.

19) எனக்கும் வாதிக்கும் இடையில் 27.07.2018ம்தேதி 11.00 மணியளவில் வாதியின் கடை அருகே நான் ஆவணத்தை கேட்டதால் என்னை வாதி தகாத வார்த்தைகளால் திட்டி, கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாக 30.07.2018ல் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

20) பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை யார் எழுதினார்கள் என்ற விபரம் அதில் இல்லை என்றால் சரிதான். அதில் சொல்லப்பட்டுள்ள இரண்டு சாட்சிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

21) வாதி எவ்வித ஆவணமும் எனக்கு எழுதி கொடுக்கவில்லை என்றாலும், வாதியின் கையெழுத்தை மோசடியாக போட்டு பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றாலும், அதனால்தான் பதில் அறிவிப்பு மற்றும் எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

22) வழக்குரையில் உள்ள வாதியின் கையெழுத்தும் , பி.வா.சா.ஆ.1 ல் உள்ள வாதியின்கையெழுத்து என்று சொல்லப்படும் கையெழுத்திற்கும் இடையே வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை.

23) பி.வா.சா.ஆ.5 ஆவணம் என்னால் வாதியின் கையெழுத்தை மோசடியாக போட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் பதில் அறிவிப்பு மற்றும் எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

24) உண்மையிலேயே வாதியிடம் நான் நிரப்பப்படாத புரோநோட்டு மற்றும் காசோலை கொடுத்திருந்தால் அது எத்தனை என்பதை குறிப்பிட்டு சரியாக சொல்லியிருப்பேன் என்றாலும், அவ்வாறு நிரப்பப்படாத ஆவணங்கள் எதையும் கொடுக்கவில்லை என்பதால் தான் எண்ணிக்கைகளை தவறாக சொல்கிறேன் என்றாலும், அதனால்தான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

25) பி.வா.சா.ஆ.2ல் வாதி ஒரு தரப்பினரோ அல்லது வாதியின் கையெழுத்தோ அல்லது சாட்சியாக கையெழுத்தோ போடவில்லை என்றால் சரிதான். வாதிதான் அவருடைய மைத்துனரிடம் என்னை அழைத்து சென்றார்.

26) எனக்கும் வாதிக்கும் 7வது மாதத்திலிருந்து பிரச்சினை ஏற்பட்டு பேச்சு வார்த்தை இல்லாத நிலையில் நான்தான் இந்த ஆவணங்களை தயார் செய்து வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

27) பி.வா.சா.ஆ.7 முதல் 15 வரையிலான ஆவணங்களுக்கும் வாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றுசொன்னால் சரியல்ல.

28) வாதியிடம் வாங்கிய கடனை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் எனக்கும் வேறு நபர்களுக்கும் உள்ள கொடுக்கல், வாங்கல் சம்மந்தபட்ட ஆவணங்களான பி.வா.சா.ஆ.7 முதல் 15ஐ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணங்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

29) செல்வகுமார் என்பவர் என் சமூகத்தை சேர்ந்தவர் என்றால் எனக்கு தெரியாது. அவர் வாதியின் கடையில் வேலை பார்த்தார். நான் சொல்லும் செல்வ குமார் முத்துமீனாட்சி மருத்துவமனைக்கு எதிரில் சீமா எலக்ட்ரிக்கல் கடை நடத்தி வந்தார் என்றால் எனக்கு தெரியாது.

30) செல்வகுமார் என் சமூகத்தை சேர்ந்தவர் என்றாலும் அவர் எலக்ட்ரிக்கல் கடை நடத்தி வந்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும் நான் அதை மறைத்து பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. செல்வகுமார் தனிப்பட்ட முறையில் கடை நடத்தி வந்தார் என்றாலும் அவர் வாதி கடையில் எந்த காலத்திலும் வேலை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

31) நான் சொல்லும் சுகன்யா என்பவருக்கும் வாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

32) வாதி ஃபேமிலி சூப்பர் மார்கெட் என்ற பெயரில் கீழ ராஜ வீதியில் கடை நடத்தி வந்தார் என்றால் சரிதான். வாதியின் கடையில் கூட்டமாக இருந்த நேரத்தில் நான் கல்லாவில் இருந்துகூட வியாபாரம் செய்துள்ளேன் என்றால் இல்லை.

33) வாதி வருடத்திற்கு 1 கோடி ரூபாய்க்கு மேல் அவரது கடையில் வரவு செலவு செய்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதுபோல் ஒரு நாளைக்கு வருமானம் 50 ஆயிரத்திற்கு மேல் வியாபாரம் நடக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

34) என்னுடைய முதல் விசாரணையில் சுகன்யா பேரில் உள்ள காசோலையை வாதியின் கணக்கில் வசூலுக்காக போட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றாலும் அதற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

35) நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையிலும், எனது முதல் விசாரணையிலும் TN 55 BB 9464 என்ற எண்ணுள்ள வாகனத்தை வாதி வாடகைக்கு எடுத்து போனதாக சொல்லியுள்ளேன்.

36) மேற்படி வாகனத்தை செட்டிகுளத்தை சேர்ந்த ஆரிஸ்கான் என்பவரிடம் விற்பனை ஆவணம் மூலமாக நான் விற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

37) மேற்படி வாகனத்தை வையம்பட்டி காவல் நிலைய எல்கைக்குட்பட்ட பகுதியில் திருச்சி- திண்டுக்கல் சாலையிலிருந்து மேற்படி வாகனத்தை நான் எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் வாகனத்தை எடுத்து வந்தது சம்மந்தமாக வையம்பட்டி காவல் நிலையத்தில் கு.எண்.259/2018 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது பொய் புகார். அந்த முதல் தகவல் அறிக்கை இதுதான். அது வா.சா.ஆ.5.

38) அது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பிணை மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த பிணை மனுவில் ஒப்பந்தத்தில் கண்டுள்ள தொகையான ரூ.2,50,000/-த்தை புகார்தாரர் ஆரிப்கானிடம் கொடுத்துவிட்டு பிணை பெற்றுக்கொள்ளலாம் என உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான்.

39) அந்த உத்தரவிற்கு மீண்டும் ஒரு மனு தாக்கல் செய்து அந்த பணத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்கிறேன் என்றும், ஆரிப்கானிடம் கொடுக்க முடியாது என்றும் பிரமாணபத்திரிக்கை தாக்கல் செய்து, மாறுதல் உத்தரவு பெற்றேன் என்றால் அதை என் வழக்கறிஞரிடம்தான் கேட்க வேண்டும், எனக்கு தெரியாது. அந்த உத்தரவு வா.சா.ஆ.6.

40) அதுப்படி இதுநாள் வரையிலும் பணத்தை செலுத்தி வைத்து பிணையில் வரவில்லை என்றால் பிணையில் வந்துவிட்டேன். அது எந்த தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராகி வந்தேன் என்று என் வழக்கறிஞரிடம்தான் கேட்க வேண்டும். நான் மணப்பாறை நீதிமன்றத்தில் பணம் எதுவும் கட்டி வைக்கவில்லை.

41) என் பெயரில் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் புதுக்கோட்டையில் கொடுக்கல், வாங்கல் சம்மந்தமாக STCNo.93/2021 என்று ஒரு வழக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கை அப்துல் வஹாப் போட்டுள்ளார் என்றால் சரிதான்.

42) என் மனைவி பெயர் பழனியம்மாள். கூடுதல் சார்பு நீதிமன்றம், புதுக்கோட்டையில் அ,வ.எண்.104/2021 என்ற ஒரு வழக்கு கோழிப்பண்ணை பங்குதாரர் என்ற முறையில் அப்துல் வஹாப் என் மீது போட்டுள்ளார் என்றால் சரிதான்.

43) நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். வெளிநாடு சென்று வேலை செய்து வந்துள்ளேன். வெளி உலக அனுபவம் எனக்கு உண்டு என்றால் சரிதான். பொதுவாக கடன் வாங்கினால் அதற்கு ஆதரவாக செக்யூரிட்டிக்காக ஆவணங்கள் பணம் பெறும்போது கொடுப்பது வழக்கம் என்றால் நான் யாரிடமும் பணம் வாங்கவும் இல்லை, ஆவணமும் கொடுக்கவில்லை.

44) அதுபோன்று நான் வாதியிடம் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை.

45) வாதியிடம் நான் ரூ.14,00,000/- வாங்கி கொண்டு, ஒரு கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

46) பிராமிசரி நோட்டு எழுதிய மாணிக்கம் என் சமூகத்தை சேர்ந்தவர் என்றாலும் என் உறவினர் என்றாலும் இல்லை.

47) வாதியிடம் வாங்கிய பணத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஆவணங்கள் தயார் செய்து, பொய் கட்சி செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

48) வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் எழுதி கொடுக்கவில்லை.

49) பூர்த்தி செய்யப்படாத ஆவணங்களில் கையெழுத்து போட்டு கொடுக்ககூடாது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. தெரிந்திருந்தால் கொடுத்திருக்கமாட்டேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.